# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்

புத். ௧] சிதம்பரம் ஏவிளம்பி ஆண்டு புரட்டாசி மீ ௨௰௧ உ க்கு 1897 ஆண்டு செப்டம்பர் மீ 26 உ [இல ௬


### வைதிகசந்திரமௌலி.

### மகாபாசுபதாஸ்திர பராவர்த்தனப்பிரயோகம்

தொடர்ச்சி

---

ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதசுவாமிகள் அன்று சாஸ்திரங்கள் இயற்றி அன்னியரவென்று சைவாத்துவித விஜயத்துவஜம் நாட்டிய காலத்தகப்படாத (ஒலபெலவவஹாணாநி ஸாத்விகாநீத்நாந்யா||) 'பத்துச்சைவபுராணங்கள் சாத்துவிகங்களேயாம்' என்பதாதிவசனங்களைப்போல் அவர் எடுக்காததும் மற்றைத் தொல்லாசிரியரும் காணாதபுதுவசனமிது. இவ்வசனமாவது சுதந்திரமோவெனின், அதுவுமில்லை. மேற்கண்ட பாஞ்சராத்திரவசனங்களுடன் எதிர்த்துப்போராடி மல்லுக்கட்டியும் வெற்றிபெறாத சாமான்யவசனம். இப்படிச் சுருதிஸ்மிருதீதிஹாஸ புராணங்களால் இவர்மதம் நிலைகுலைய நேர்ந்தது. மேற்கண்டபடி இவர் சுவீகாரபாஷ்யமும் கைவிட்டது. அவைஎல்லாம்சேர்ந்து நிலைநாட்டாத சித்தாந்தத்தையா சில தமிழ்ப்பாட்டுகள் நாட்டப்போகின்றன? அந்தோ 'வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்' வென்ற செய்யுள் மட்டைக்கொண்டு வேதங்களிலும் ஆகமங்கள் சிறந்தனவெனத் தாபிக்கவெழுந்து அவாந்தர சித்தாந்தியான அவாந்தர சைவரைப்போல் இவரும், சித்தாந்தியாகப் பார்க்கிறார்போலும்! நிற்க. ஏதோ கர்ண பரம்பரையில் முன்னூறு வண்டிச்சுவடியுளார் போல இவரெடுத்துக் காட்டுஞ் சிலசைவர், இவர் சொப்பனசாம்ராஜ்யத்தில் பிராமணபூதராவாரேயன்றி வேறு எவரேனும் அவர்வாக்கியத்தைப் பிரமாணங்கொள்வரா? மேலும் இவர்வசிக்கும் காசிமாநகரில் அனேக பண்டிதமணிகளுளரே, அவர்களுள் இவர்காட்டும் தமிழ்வசனங்களுக்குப் பிரமாணமுண்டென ஒப்பும் ஒருபண்டிதர் இருப்பாரா? அந்தோ! 'மடையரும் மந்திரோபதேஷ்டா' வெனக்கொள்ளும் இனத்தார் 'கள்ளன் பாட்டும் கைகண்டவேதம்' என்பார்போல 'இவரும் வேதாந்த விசாரத்தில் தலையிட்டு இடையே நாட்டுப்பாட்டையும் சேர்த்துவருகிறார். நிற்க. தற்காலத்துப் பாகவதர் என்றதோர் நிலையற்ற சித்தாந்திகள். சமயோசிதமாய் ஓர் வேதவாக்யம் 'அடுத்ததோர் அம்மையார்கதையும் சொல்வதுபோலவே' இவர்சொல்வதால் பயன்யாது கருதினரோவறியோம். பிறகு புராணங்களும் ஆகமங்களும் உபநிடதத்துக்குவியாக்யைபோலென்றார். அதுவேதசாரமான வைதிக சிவாகமவிஷயமேயன்றி அவைதிகமாகிய இவர்கொண்ட சிவாகமவிஷயமல்லவாம். அவ்வித வைதிகாகமங்களுக்கு இவர்சொல்லும் பெரிந்தன்மை பமையுமேயன்றி இவர்கொண்ட தீக்ஷாதிகளைப்பற்றிப்பேசும் காமிகாதியவைதிகங்களுக்கதுகூடாதாம். ஆகவே ஆகமிகர்கூறிக்களித்த பொதுசிறப்புத்தன்மை தங்கோஷ்டிமாத்திரத்தில் மணம்பெறும் வாதமாம் என்க. ஆதலாற்றான் ஸ்ரீவித்தியாரண்ய சுவாமிகள் சூதசங்கிதாபாஷ்யத்தில் சொன்னபடி ஆதியில் ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் ப்ரம்மசூத்திரபாஷியம் செய்தருளவேண்டிப் பன்முறை சூதசங்கிதையைப் பார்த்தருளினர் என்பது கர்ணபரம்பரைக்கதை. இது நியாயமே. மற்றப்புராணபாகங்கள் தந்திரசம்பந்த முள்ளனவெனவும் சூதசங்கிதை முற்றும் வைதிகமும் என்று முன்னரே நிரூபித்தோம். ஆனால் பன்முறை பார்த்தார்என்பது பதினெண்முறை என்பதிலும் அதிக எண்ணைக்குறிக்கத்தக்க சொல்லென்பதை 'யறியவாற்றலற்று ப்ரம்மவித்தியாஅதிபர் பன்முறை என்று எழுதியது குற்றம்போலக்காட்டிய விவரறியாமைக்கு யாம் என்செய்வது?

சௌரபுராணத்தில் 36-ம் அத்தியாயத்தில்

உபமந்யுஸ்தபஸ்தேபே மஹாதேவஹிமேவதம்
ஸஹஸ்ராஹிவாஸநோவிப்ர வஹஸ்ரப்ஸதாநியஃ||

'உபமன்யு இமயமலையடைந்து காற்றையே ஆகாரமாய்க்கொண்டு அனேகநூற்றாண்டுகள் தவஞ்செய்தார், எனப்படுவதால், ஜன்மசம்ஸித்தரான ஸ்ரீ வசிஷ்டர் அகஸ்தியராதிகளுக்கும் கற்பஸித்திபெற்ற வாமதேவப்பிரஹ்லாதாதிகளுக்கும் 12-வருஷங்கள்மாத்திரையில் சித்திபெற்ற ஸ்ரீ கண்ணபிரானுக்கும் 12-நாழிகைகளில் அல்லது சிறிது நாழி

கைகளில் ஸ்ரீமத் கண்ணன் திருமுகமண்டலத்துதித்த கீதையால் கிருதார்த்தனான அர்ஜுனனுக்கும் அவர்மிகவும் குறைந்தவரோ? இவரையோபரமேசரன் தமது பக்தசிகாமணியென்றது! கிற்க. ஒருகுடம்அமந்திரத்தண்ணீரால் மட்டில் சித்திபெற்றவராக இறுமாந்துவருமிக்காலச்சைவர் உபமன்யுவுக்கு மேலேதானே. ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் ப்திணென்முறை சூதசங்கிதையைப்படித்தார். அதை இக்காலத்து யாழ்பாணத்தார் ஒரேமுறை மேற்பார்வைபார்த்துப் பொருளுண்மை நிலதெளிந்தார். அர்ஜுனன் கிருஷ்ணன் உபமன்யுமுதலிய தொல்லாசிரியர் பாசுபதவிரதத்தை அதிகமாகக்கொண்டு வருந்தினர். இவர் ஒருகொடிப்பொழுதில் சிவஞானம்பெற்றார் ஆகையால் அவர்களிலும் இவரே சிறந்தவர். மேலும் இவர்தான் என்ன சிறப்புடையார். ஒரு எழுத்துக்கூட வடமொழியில் பார்க்காது ஒரேமுறை இங்கிலீஷ்மொழிபெயர்ப்புப்பார்த்துண்மையறிந்து தெளிந்தசகோதரரும் அனேகர் இக்காலத்திலகப்படுவோர். அந்தோ! பாவம் இவர் என்செய்வார்! அர்த்தவாதநிலே இவருக்குத்தெரியாது. பதினெண்முறை என்றால், அது அனேகமுறை என்றபொருளிற்றான் உபயோகிக்கப்பட்டது.

புருஷசூக்தத்தில்:—

“அத்யதிஷ்டத்தசாங்குலம்”

‘ஈரைந்தங்குலமிருந்தானென்ப’

என்றிருந்தால் இனி ஈசன் உலகுக்குப் பத்தேயங்குலம்மேல். அங்ஙனம்சொன்னால் ஈசனுக்கது குறைவாம் என்று எண்ணியே பாஷ்யகாரர்களும் அந்த ப்ரம்மவித்தியாபத்திராதிபரும் ஈரைந்தென்பதற்கும் அபரிமிதம் (பல) என்று பொருள்கொண்டனர்’ என்றும் இவர்சொல்லத்தடையில்லை. இனி இவர் வேதங்களுக்குப் பாஷ்யம் செய்யும்பொழுது:—

க- த்ரிம்சத்வர்ஷஸஹஸ்ராணி|

உ- ஸஹஸ்ரசீர்ஷா:புருஷ:|

ங- அத்யதிஷ்டத்தசாங்குலம்|

ச- பாராசர்யஸ்தசாம்சஸ்ய சதயாகவ்ருதஸ்ய ச|

ரு- ஸம்ஸாரீவஸஸ்விஜ்ஞ ஸஹாஸ்ரபாதகஸ்ய ச|

சு- பாராசர்யசதம் ஸம்ஹிதஸ்யச|

எ- நீவாரசூகவத்தந்வீ|

அ- சூகாசவத்தவத்தசூநிதம்|

கூ- ஜிஜீவிஷேச்சதம்ஸமா:|

௰- யாவதேந ப்ரதிநோசதி ஸஹஸ்ரேண ஸமோ

ஹவி|

கக- ப்ரதிநாஸஹஸ்ரேணஸமேதந|’

என்பதாதி வாக்கியங்களில் எண்வருத்ததற்கெல்லாம் அதிகம் என்றுவது சூக்ஷ்மம் என்றுவது பொருள்கொள்ளாது அவ்வவ்வெண்களையும் குறைவறக்கொண்டே பொருள்முடிப்பாராக. இது ஒருபெரிய பாசுபதாஸ்திரந்தான் போலும்! இவ்வளவுதான் இவர்வாக்கியார்த்தப்பெருமை. சுமார் ஐந்துவருஷகாலமாய் இவ்வவைதிகசைவரே மாயாவாதிகளென்றும் தக்கபிரமாணங்காட்டி நாட்டியும் மீண்டும் வைதிகர்களை மாயாவாதியென்று பழம்பாட்டைப் பாடுவதுபோல இவைகளும் கவனிக்கத்தக்கனவல்ல. மேலும் இவரினத்தாரே மாயாவாதிகள் என்பதற்குப் பலகாரணங்கள் பலரால் முன்னெடுத்துக்காட்டப்பட்டபோதிலும் இப்பொழுது இவரே தமது ஆகமங்களுக்குச் சமமாகக் கொண்டபுராண ஆதாரங்கொண்டு இவரே மாயாவாதிகள் எனக்காட்டுவோம்:—

சௌரபுராணத்தில் 39-ம் அத்தியாயத்தில்:—

‘மாயாவாதம் கலியுகத்தில் உண்டாம்’ எனவரைந்து அவர் இலக்கணம்கூறும் வசனங்கள் பலவுள. அவற்றில் இவரினத்தாரையும் மாத்துவரையுமே மாயாவாதிகள் என்பதற்குத்தகுந்த பிரமாணங்களை எடுத்துக்காட்டுவோம். அந்தப்பிரகரணமே மத்துவமதத்தையே நிந்தித்து சிவாத்துவிதவைபவம்பேசுவது. அங்குள்ளவசனங்கள்.

(க) ஸம்ப்ராப்தே கலியுகே ப்ராயோ வேதவிருத்தம் ப்ரவர்த்தநம் பவிஷ்யதி|

(உ) மாயாவாதமஸச்சாஸ்த்ரம் ப்ரவிஷ்யந்தி நராதமா:|

(ங) தேஷாம் ப்ரதாநோ தைத்யேந ஸர்வம் ஸாதநோ பவேத|

(ச) யோ மநிஜா வர்ணாநித்யம் ஹீநோ தத்வநிஜகா:

(ரு) வேதாஸ்ச மித்யாஹு: ப்ராமாண்யம் த்ருசயேந நா:|

(சு) * * * * *

(எ) * * * * *

(அ) * * * * *

(கூ) * * * * *

(௰) வேதவ்யாக்யாந்த்ர ப்ராமாணிகா ஹி நீநவவேதிகா:|

( ) க வைதநிஜாநிதா:ப்ரத்யக்ஷம் மௌநவா:

(கஉ) கஷ்டப்ரதமவிகாஸம் வேதஜா நாதிதவத:

(கங) ஸம்ஸாரமோஹம்ஸாம்ஸ்ருதிஷ்யம் திவ!—

(கச) மாயாவிஷவிதம் விஸ்ருதி கீர்த்யைகவாதிந:’ என்பன இவற்றின்பொருள்.

(1)“கலியுகம் பூர்ணமாக வியாபிக்கும்பொழுது ஆரியாவர்த்தத்திலும் சேருவார்.

(2) மாயாவாதமாகிய அசற்சாஸ்திரத்தை யவர்வழங்குவர்.
(3) அவர்களைக்கண்டால் ஆடையுடனே மூழ்கவேண்டும்.
(4) யோகசாஸ்திரத்தை நிந்திப்பார் அக்னிஹோத்திரத்தைநிந்திப்பார்.
(5) வேதாந்தங்களுடன் புராணங்களும் சமமென்பர்.
(6) * * * * *
(7) * * * * *
(8) * * * * *
(9) * * * * *
(10) வேதத்தைப் பிரமாணம் என்பார்போல் நடித்து வேறொன்றையபிமானித்து வைதிகத்தின் வழிசெல்லாதவர்.
(11) அத்துவித நிந்தையில் சிறந்தவர் தமது கிரந்தங்களை மறைத்துக்கொள்வார்.
(12) புறமத சித்தாந்தத்தில் சிறிதும் அவருக்கறிவில்லை.
(13) ஹம்ஸாதி சன்னியாசிகளை நிந்திப்பர்.
(14) 'மாயையிற்றோன்றியது உலகம்' என்பதால் அவர் மாயைகவாதி எனப்படுவோர்" என்பது.

மேற்கண்ட வசனங்களால் உலகத்துக்கு மாயை முதற் காரணம் ஈசன் நிமித்தகாரணம் என்று வாதிப்பவரே மாயாவாதிகள் என்பது பிர்மாணசித்தம். இந்தச்சௌர புராணமோஸ்ரீமதப்பயதீக்ஷிதஸ்வாமிகளால்'வவ த தவ ந' என்று வாயுசங்கிதையோடு சப்பிரமாணமாக எடுக்கப்பட்டது. மேலும் இங்குசொன்ன மாயாவாதிலக்ஷணம் முற்றும் இவரினத்தாரிடம் பொருந்தியிருக்க, ஸ்பஷ்டமாக ஒரு சிறியபுராணப் பிரமாணங்கூடக் காட்டாது விதண்டாவாதமாய் இவர்மாயாவாதம் என்று ஸ்ரீமத் வைதிகசித்தாந்தத்தைத் திட்டினால் இவர்திட்டேக்குப் பண்டிதராசமாதானங்கூறுவது? அற்றேல் இங்கு அத்துவிதத்துவேஷமும் இருந்தாலல்லவோ மாயாவாதி எனப்படுவோர்; இவர் சிவாத்துவிதியன்றோ எனின், அற்றன்று. இங்கு அத்வைதம் என்றது இவர் நேற்றுச்சிவாத்துவிதம் என்று பெயரிட்டுவழங்கும் போலியத்துவத்தையன்று; மற்று உண்மைசிவாத்துவிதத்தையே. ஆதலாற்றான் இதேபிரகாணத்தில். ஸ்ரீ லக்ஷுமிதேவி விஷ்ணுவைத்துதிக்கும் பிரகாணத்தில்:—

த்வய்யேவ விஶ்வமிதம் ராஜ்ஜு ஹாஜம் ஸகாதரம்|

'உன்னிடத்து உலகம் கயிற்றரவம்போலே' என்றுள்ளது. மேலும் ஆரம்பத்தில் 2-ம் அத்தியாயத்தில்:—

'விபாகமிஜமனாயெ விஶ்வம் ஹாதி நவஸ்துத:'

'அந்த ஸர்வதடஸ்தலக்ஷணம்பொருந்திய ஈசனிடம் உலகம்தோன்றும் உண்மையில்லை' என்று ஸ்பஷ்டமாய் சிவகைவல்யவாதமாகிய சிவாத்துவிதமே சொல்லப்பட்டது. அவ்வித சிவாத்துவிதமே ஸர்வவேதார்த்தசங்கிரகம் என்றும் சொல்லப்பட்டது. ஆகவே இவரும் இவரினத்தாரும் மாயாவாதியாகின்றார். இவர் முன்வெளிவந்த 'தவித சைவரே மாயாவாதிகள்' 'மாயாவாதசைவசண்டமாருதம்' முதலியநூல்களைப் பார்க்காதவரானாலும் மேற்கண்டவசனங்களுக்கு இவர் இலக்காகாது ஒதுங்கமுடியாதாகவே, இவருக்கு சர்வகர்மசாக்ஷியாகிய சூரியபகவான் வியாஸன் வழியளித்த இம்மாயாவாதிப்பட்டம் சாசுவத சிலாலிகிதப் பட்டம் என்க. மேலே ஸ்ரீ ஜகத்குருநாதன் வியாசசீடர் என்பது ஒருகுறைவுபோல் இவர்காட்டும்கதை வர்ணவர சீடராவதுபோன்ற குற்றமாகாதுபற்றியும் அந்தவியாஸரே இவர்கடைப்பிடித்த கூர்மலிங்காதிபுராணங்களுக்கும் பிரவசனகர்த்தாவாகையாலும் இவர் சுவீகாரஞ்செய்துகொண்ட பாஷ்யமாகிய ஸ்ரீகண்டபாஷ்யத்தில் ஸ்பஷ்டமாய் அப்பாஷ்யாகாரரால் தோத்திரம் செய்யப்பெற்றமையாலும்

நார்ஜுநேந ஸமஶ்ஶ்சித் ஹக்தோ ஹூதோ ஹவிஷ்யதி। ருதே ஸத்யவதீஸூநும் க்ருஷ்ணம் வா தேவகீஸுதம்||

'அர்ஜுனனுக்குஸமான சில பக்தனுண்டானதுமில்லை; உண்டாவதுமில்லை; ஸத்யவதியின் புதல்வனையும் தேவகீஸுநுவாயகண்ணனையும்தவிர' என்ற பிரமாணத்தால் சாம்பவசிகாமணியாதலாலும், சௌரபுராணத்தில் பலவிடங்களில் "யஶ்ஶம்பும் தத்த்வதோ வேத்தி ஸ ஏவ நாராயணஸ்ஸ்வயம்" 'எவன்சம்புவை உண்மையாய் அறிவான் அவன் சாக்ஷாத் நாராயணனே' என்று ஸ்ரீமன் நாராயணன் மகாசிவஞானி எனக்குறிக்கப்பட்டமையால் ஸ்ரீவியாஸர் ஸ்ரீமன் நாராயணாவதாரமாகையாலும், ஸ்ரீநாராயணாவதாரமான ஸ்ரீ போகாவலிசெய்தருளிய சுதர்சன மூர்த்திகளைப்போலெமக்குப் பரமாசாரியரும் சர்வஞ்ஞரும் வேதாசாரியரும் ஆவதாலும், ருக்வேதம் வஸிஷ்டசூக்தத்தில்குறித்த நிரம்பிய பெருமைபெற்ற ஸ்ரீவசிஷ்டவம்சத்திலகராதலாலும், ஸ்ரீமத் காழிப்பிள்ளையார் திருவவதாரஞ்செய்த திருக்குலமாய கௌணியகுலப் பூர்வபுருடராதலாலும், வியாஸர்பெருமையளவுக்கடங்குமோ? அந்த வியாஸருக்குமட்டோ, அவர் சீடர். ஸ்ரீரகசியோபநிடதம், பிரகஜ்ஜாபாலம் அவிமுக்த ஜாபாலமாதி அனேகவுபநிடதங்களில் பெயர்பெற்ற ப்ரம்ம நிஷ்டாசாம்ராஜ்யானுபவதுரந்தர ஸ்ரீ சுகப்ரம்மத்துக்குமல்லவோ அவர்கள்சீடர்கள். ஸ்ரீ ரகஸ்யோபநிடதத்தில்— ஸ்ரீமதம்பிகைபாகனருட்பெருக்கத்தால் மகாவாக்கியங்களுபதேசிக்கப்பெற்ற மகானுபாவன்வழியிற்றோன்றிய வித்யா சந்தானத்தவதரித்த ஜகத்குரு சங்கரமுனிராஜனுக்கு சுகர் சிஷ்யத்துவமும் வியாசாதிசிஷ்யத்துவமும் வியாஜமேயாயினும், ஸர்வவேதசம்ஸித்த சிவஞான ஸாம்ராஜ்ய சக்ர்

கிரவர்த்தியான் ஸ்ரீமன் நாராயணனுக்கு அவதாரங்களில் அசஸ்தியோபமன்யுக்களைப்போ லமைந்தமையால் குற்றம் யாதுமில்லை. ஆனால் அவர் சூத்திரங்களுக்கு அவர்சீடர் பரம்பரையில் வித்யாசந்ததிசம்பந்தமுற்றவர்செய்யும் பொருளே நியாய மாதலால் மற்றவர்பொருளிலும் ஸ்ரீஜகதாசாரியர் உரைத்தபொருளே வியாசசம்மதமென்பதுயட்டிற் சொல்லாதமையும். மேலும் ஸ்ரீ ரகஸ்யோபநிடதம் சுக சுவாமிகளுக்குச் சாக்ஷாத் பரமசிவனே மகாவாக்யோபதேசம் செய்ததாகத் தெரிவதால் அந்தவித்யாசந்ததியை ஸ்ரீபரமேசுவர வித்யாசந்ததி எனவும் சொல்லலாம். வியாஸர் விஷ்ணுவாதலால் அச்சுதன் வித்யாசந்ததியாயிற்று. வஸிஷ்டர் ப்ரம்மபுத்திரரும் அவர் சீடரும் ஆதலால் அது ப்ரம்மதேவன் வித்தியாசந்ததியுமாயிற்று. சிவரகஸியம் நவமாம்சம் கூறிய பிரகாரம் ஸ்ரீ லோககுருஸ்வாமிகள் தாமே ருத்திராம்சரவதாரமாகவே அவரது பாஷ்யம் ஸ்ரீ ருத்திரபிரணீதமும் ருத்திரசம்மதமும் ஆயிற்று. ஆகவே பிரம்ம விஷ்ணு ருத்திரர் எனப்படும் குணமூர்த்திகளும் சாக்ஷாத் ஸர்வேசுவரனான துரீயமூர்த்தியும் ஒப்பிய சத்பாஷ்யம் இவருக்கு மாயாவாதபாஷ்யமும் மற்றொன்றுமாகத்தோன்றினால் அது இவரது பாவப்பயனேயன்றி வேறியாதெனலாம். ஸ்ரீகண்டபாஷ்யத்திலும் (யாவதயிகாரம்) "அதிகாரம் வரை" சூத்திரத்திலும் வஸிஷ்டாதிகளே யதிகாரிகளாகப் பிரம்மவித்தியாசம்பிரதாயா சாரியராகக் குறிக்கப்பட்டார். மேலும் வியாஸ சூத்திரமே மோக்ஷம் கொடுக்கும்வழி என்று ஸ்பஷ்டமாய் அவருரைத்தார். ஆகவே அப்பாஷ்யத்தின் பெருமையும் ஸ்ரீ சங்கர குருநாதன் பெருமையும் ஆனந்தக்கருணன் பிரபையைப்போல்இவருக்குக் கிடைத்தது எதனால்? அதிகமாய் அத்துவித பாஷ்யத்தையும் அத்விதாசாரியர்களையும் பற்றிப்பின்னொரிடம் வெளியிடுவாம். ஆகவே வேதங்களைப் பிராம்மணங்களைக் கொண்டும் வேதாந்தங்களை மீமாஞ்சை வேதோபப் பிருங்கணங்களைக் கொண்டும் பொருட்படுத்தவேண்டுவதே நியாயமாம். அது கொண்டே வியாஸசூத்திர பாஷ்யக்காரர்கள் அனேகர் ஜைமினிநியாயங்களாலும் புராணஸ்மிருதீதிகாஸங்களாலுமே பொருட்பொருத்தம் விளக்கினர். ஆகவே வேதாந்தங்களே முக்கியப் பிரமாணங்களும் அவைகளுக்கு ஸ்மிருதி புராணம் இதிகாசங்கள் ஓர் வகைச் சிற்றுரையாம் என்றும் ஏற்பட்டது. வைதிக சிவாகமங்களோ, கற்பசூத்திரங்கள் கன்மகாண்டாங்கமாவதுபோல, வுபநிடதாங்கமேயாம். அவை திகசிவாகமங்களோ, வேதவைதிக சம்பந்தமற்ற புறநூலேயாம். புராணாதிகளில் எங்காவது வேத விருத்தாந்தம் கண்டால் அது தாந்திரிகானுக்கிரக வசனமென ஒதுக்கவேண்டியதேயாம் என்று முடிந்தது மீண்டும் உபசங்கரிக்கப்பட்டது. இம்மட்டோ! காசியிலிருந்து, ஐயர் எழுதிய விஜயத்துவஜத்துள்ள நான்காம் விஷயம் மறுக்கப்பட்டது. பிறகு ஐந்தாவதைக் கவனிப்பாம். இவ்விஷயம் முன்னர் ஒருமுறை விசாரிக்கப்பட்டதேயாயினும் இவ்விஷயத்தை ஏதோ ஒரு பெருங்குற்றமாக ஸ்ரீ லோககுருஸ்வாமிகளிடம் கண்டுபிடித்ததாக இவர் மீண்டும் அக்கதையை எடுத்து அதே பிரமாணங்களை யனுவதித்து ஏட்டை நிறப்பு கிருராகையால் மீண்டும் அதை ஒருவாறு சுருக்கி இங்குகாட்டுவோம். இவர் புராணங்களை எடுத்துக்காட்டிப் பொருளுரைத்தவையும் ஆசாரியர் வாக்கியசேஷத்தைக்கொண்டு பொருளுரைத்ததிலும் வித்தியாஸமில்லை என்பதை ஸ்பஷ்டமாய் முன்னர் நிரூபித்தோம். "ஜாபாலோப்நிடதம் ஐசுவரிய காரணமாதலாற் பூதி" என்றுரைத்தமையாலும் 'ஐக்ஷாயம்ஓம் ஓம்ஹஊயஹ்ம்வ' என்று மகா பாரதமும் 'ஹஓதிஹஓ!திகாரகெவந' என்றுசிவபுராணமும் உபப்பிரம்மணஞ் செய்தமையானும் ஸ்ரீமத் குருநாதன் புராணேதிகாசங்களுக்கும் சாகாந்தரத்துக்கும் விரோத மில்லாது வியாக்யானம்செய்த உண்மையை யாம்முன்னரே நிலைப்பித்தோமாதலால் இவர் அவற்றைக்கண்டே யடங்குவாராக. ஸ்ரீகண்டசிவாசாரியசுவாமிகளும் வேதவ்யாஸரும் மற்றுமுள்ள நாயன்மாரும் ஸ்பஷ்டமாய் அபின்னநிமித்தோபாதான வாதம்செய்து நிரூபித்திருக்க அதற்கு விருத்தமான கேவலநிமித்தகாரணவாதம் கைக்கொண்ட சுஷ்க தார்சிகர் ஒருவரையும் வடமொழிவழியறியாச்சிலரையும் ஏதோபிரமாணமாகக் கனவுகண்டு அவர்மீது குற்றம்கண்டதையே ஒருதுவேஷ ஏதுவாகக்கொண்டு நியாயம்வழுவாது ஸ்ருதிஸ்மிருதீதிஹாஸ புராணங்களுக்கு விரோதமில்லாது ஸ்ரீ ஜகதாசாரியர் வியாக்கியானஞ்செய்ததைக் குறைகூறவெழுந்து இவர் சமயாபிமானம் சமயந்தோறு மேறுவதைமட்டில் சந்தோஷிக்கவேண்டியதே. இந்தக் கலிகாலத்தில் இவ்வளவு மாகாத்மியம்நிறைந்த மகாபரதகண்டத்திற் பிறந்து, அதிலும் சுத்தவைதிக சிகாமணிகளான ஸ்ரீகௌண்டின்யாதி மகரிஷிகோத்திர சம்பந்தமுற்று, சுத்தாஹிதாக்னி குலத்தவராய் அதிலும் ஸத்வைதிகாசாரியர் திருவடிசேவைசெய்யும் பாக்யத்துடன் தானும் அனேக வேதவேதாந்த வுண்மைகளையறிந்துமுள்ள வித்துவான்கள் அனேகர், இந்தக்காலத்துத்தோன்றும் புறமதங்களை நிக்கிரகிக்காது தூங்க, நமதுபாரதகண்டத்துக் கெவ்வழியிலும் சம்பந்தப்படாத இப்பாரதகண்டத்துள்ள தாந்திரிகமதத்தில் நல்ல முறட்டுப்பிடிவாதமுள்ளவராய் இவர் தோன்றி இருப்பதைப்பற்றி யாம் புகழத்தக்கதே. இன்னும் வரும்.